அம்பத்தூர்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 290/2007 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 30ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 30.07.2025 |
| பெயர் தர்மேஸ்வரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:—

1. இந்த வழக்கை தியாகராஜன் என்பவர் என்மீது தாக்கல் செய்துள்ளார். வாதியும் நானும் உறவினர்கள் என்றால் சரிதான். வாதியின் தந்தை ஸ்ரீநிவாசனின் தாத்தாவும் என்னுடைய தாத்தாவும் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். மேற்படி ஸ்ரீநிவாசன் தாத்தா பெயர் ஏகாம்பரம். எனது தாத்தாபெயர் பாலசுப்பிரமணியம். ஸ்ரீநிவாசன் என்னைவிட வயதில் முத்தவர் ஆவார் எனக்கு அண்ணன் முறை. வேதகிரி முதலியார் எனது பங்காளியின் வாரிசா என்றால் இல்லை. லோகநாதன் முதலியார் எனது பெரியப்பா ஆவார். வழக்கு சொத்து எந்த காலத்தில் வாங்கப்பட்டது என்றால் பாலசுப்பிரமுதலியார் அப்பா மூலம் கிடைத்த பூர்வீக சொத்து அவர்தான் லோகநாதமுதலியாருக்கும் அப்பா ஆவார். பாலசுப்பிரமுதலியார்

அப்பா ராமசாமிமுதலியார் மற்றும் லோகநாதமுதலியார் என்பவரின் அப்பா ஏகாம்பரமுதலியார் ஆவார்கள்.

2. லோகநாதமுதலியார் மற்றும் பாலசுப்பிரமுதலியார் ஆகியோரும் தந்தை வேறுவேறு நபர்கள் என்றால் சரிதான். எனவே அவர்கள் உடன் பிறந்த சகோதரர்கள் இல்லை என்றால் சரிதான். பாலசுப்பிரமுதலியாருக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் பூர்வீகமாக ராமசாமி முதலியார் மூலமாக வந்தது. ராமசாமி முதலியாருக்கும் சொத்து பூர்வீகமாக கிடைக்கப்பெற்றது. மேற்படி ராமாசாமி முதலியாரின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமி முதலியார் மூலம் பாலசுப்பிரமுதலியாருக்கு சொத்து கிடைக்கப்பெற்றதற்க ஆவணம் எதுவும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. ராமசாமி முதலியாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலசுப்பிரமுதலியார் ராமசாமி முதலியாரின் மகன் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பாலசுப்பிரமுதலியார் எனது தாத்தா என்பதால் அவர் மூலமாக பூர்வீக சொத்தை அடைவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை துரைசாமி முதலியார் பாலசுப்பிரமுதலியார் என்பவரின் மகன் என்பதை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் துரைசாமி முதலியாரின் மகன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேதகிரி முதிலியாரிடம் இருந்து துரைசாமி முதலியார் 11.03.1953 அன்று சுமார் 3093.7 சதுரஅடி நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். லோகநாத முதிலியாரிடம் இருந்து துரைசாமி முதலியார் 21.02.1961 அன்று சுமார் 3093.7 சதுரஅடி நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

4. மொத்தமாக சுமார் 6184 சதுரஅடி நிலத்திற்கு தான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கின் வாதிமீது அசல் வழக்கு எண் 305 /2007 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சர்வே எண் 269/2 ல் சுமார் 15,521 சதுரஅடி நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 15,521 சதுரஅடி சொத்தில் இருந்து மேற்கூறிய 6184 சதுரஅடி நிலத்தின் அளவை கழித்தால் சுமார் 9337 சதுரஅடி சொத்திற்கு இரண்டு வழக்குகளிலும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. அசல் வழக்கு எண் 305 /2007 எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. வாதி இவ்வழக்கில் 8720 சதுரஅடி நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் வாதியின் நிலத்தை தற்போது நான் அனுபவித்து வருகிறேன் என்றாலும் சரிதான். வாதியின் நிலத்தை அனுபவித்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வாதியின் சொத்து அல்ல ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 8720 சதுரஅடி நிலம் காலிநிலம் என்றால் மரங்கள் உள்ளது. வாதிநிலத்தில் வீடுகட்ட வந்தபோது தான் எனக்கும் அவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)